சுருக்கம்

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் – முன்னாள் மத்திய சமையற்கூடத்தில் சமையலர்களாக பணியாற்றி, தற்போது சத்துணவுத் திட்டத்தில் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வரும் சமையலர்களை சமூகநலத்துறையில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர், இரவுக்காவலர் போன்ற பணியிடங்களில் பணி நியமனம் செய்ய ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சஉதி.2)துறை

அரசு ஆணை (நி) எண்.8

நாள்:06 –01–2010.
திருவள்ளுவர் ஆண்டு 2040
மார்கழி 22 ம் நாள்

படிக்கப்பட்டது:-

1 அரசு ஆணை (நிலை) எண்.857/பொது (DPEP) துறை நாள் : 28.05.1982.
2 அரசு ஆணை (நிலை) எண்.1113, கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை, நாள் : 15.06.1983.

மேலும் படிக்கப்பட்டது:-

3 சமூக நல ஆணையரின் கடித எண். 102130/08 நாள்: 09.10.2006 மற்றும் 15.03.2008.

------

ஆணை :-

புரட்சித்தலைவர் எம்ஜிஆர் சத்துணவுத் திட்டம் தொடங்கப்படுவதற்கு முன்னர் (1982க்கு முன்னர்) தமிழகத்தில் மதிய உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்தது. அத்திட்டத்தின் கீழ் குழந்தைகளுக்கு மதிய உணவு அளிக்கும் பொருட்டு (அப்போதைய வட ஆற்காடு, தென்னாற்காடு மற்றும் செங்கல்பட்டு) 3 மாவட்டங்களில் 97 மத்திய சமையல் கூடங்கள் செயல்பட்டு வந்தன. பல பள்ளிகளுக்கு தேவையான மதிய உணவு ஒரு மத்திய சமையல் கூடத்தில் தயாரித்து பள்ளிகளுக்கு கொண்டு சென்று வழங்கப்பட்டு வந்தது. மேற்காணும் 97 மத்திய சமையல் கூடங்களில் 97 சமையலர்கள் உணவு சமைக்கும் பணியை மேற்கொண்டு வந்தனர். இவர்களுக்கு உதவியாக மாவட்ட ஆட்சித் தலைவரால் நிர்ணயம் செய்யப்படும் தினக்கூலி அடிப்படையில் உதவியாளர்கள் (Helpers) பணியாற்றி வந்தனர்.

2. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 5 முதல் 9 + வயது வரையுள்ள பள்ளி குழந்தைகளுக்கு இலவச சத்துணவு 1.7.1982 முதல் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், இப்புதிய சத்துணவு திட்டத்தை செயல்படுத்த பள்ளிக் கல்வித் துறையால் செயல்படுத்தப்பட்ட மத்திய சமையல் கூடத்திற்கு பல்வேறு பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன. அவற்றில், ஒரு மத்திய சமையல் கூடத்திற்கு ஒரு (கூடுதல் சமையலர்) சமையலர் பணியிடம் வீதம் மொத்தம் 97 சமையலர் பணியிடம் ரூபாய் 250–5–330–10–400 என்ற ஊதிய ஏற்ற முறையில் தோற்றுவிக்கப்பட்டது.

3. மத்திய சமையல் கூடத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் சுமார் 5 முதல் 10 ஆண்டுகள் வரை சமையலர் உதவியாளர்களாக பணியாற்றி வந்த 97 நபர்களும் புதியதாக தோற்றுவிக்கப்பட்ட சமையல் பணியிடங்களில் ரூ.250–5–330–10–400 என்ற ஊதிய விகிதத்தில் நியமனம் செய்யப்பட்டனர்.

4. இந்நிலையில், பள்ளி குழந்தைகளுக்கு சூடான சுவையான சத்துணவு வழங்கும் பொருட்டு அந்தந்த பள்ளி மையங்களிலேயே 15.9.1982 முதல் சத்துணவு வழங்க முடிவு செய்யப்பட்டது. இதனால் 15.9.1982 முதல் மத்திய சமையல் கூடங்கள் கலைக்கப்பட்டன. எனவே இச்சமையலர்கள் பள்ளி சத்துணவு மையங்களில் சமையலராக பணியமர்த்தப்பட்டனர்.

5. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையின்படி அடிப்படை ஊதிய விகிதத்தில் (250–5–330–10–400) பெற்று வந்த முன்னாள் மத்திய சமையற்கூட சமையலர்கள் 97 நபர்கள் அதே அடிப்படை ஊதிய விகிதத்தில் கல்வித்துறையில் ஈர்த்துக் கொள்ளப்பட்டனர். இருப்பினும் 97 (கூடுதல்) சமையலர்களுக்கு தினக்கூலி அடிப்படையில் ஊதியம் வழங்க உத்தரவிடப்பட்டது. இவ்வாறு, முன்னாள் மத்திய சமையற்கூட சமையலர்கள் கடந்த 25 வருடங்களுக்கு மேலாக தினக்கூலி அடிப்படையில் ஊதியம் பெற்று வருகின்றனர். இந்நிலையில், இப்பணியாளர்களின் கூட்டமைப்பு தங்களை அடிப்படை ஊதிய விகிதத்தில் (ஊதிய ஏற்றத்திற்கு முன்னரான ஊதிய விகிதம் ரூ.2550–55–2660–60–3200) ஊதிய நிர்ணயம் செய்து சமூகநலத் துறையில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் மற்றும் இரவுக் காவலர் போன்ற பணியிடங்களில் தங்களை நியமனம் செய்ய அரசை கேட்டுக் கொண்டனர்.

6. மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதங்களில் அரசு ஆணை (நிலை) எண். 22, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, நாள்:28.02.06ன்படி 01.01.2006 அன்று 10 வருடங்கள் தினக்கூலி அடிப்படையில் பணிமுடித்து தற்போது பணியாற்றி வரும் 33 முன்னாள் மத்திய சமையற்கூட சமையலர்களின் பணியினை சிறப்பினமாக கருதி வரன்முறைப்படுத்தி அவர்களை மாவட்டங்களில் சமூக நலத்துறையிலோ அல்லது பிற துறைகளிலோ காலியாக உள்ள அலுவலக உதவியாளர், அல்லது இரவு காவலர் போன்ற பணியிடங்களில் அவரவர் தகுதிக்கேற்ப ஈர்த்துக் கொள்ளலாம் என சமூகநல ஆணையர் பரிந்துரை செய்துள்ளார்.

7. இந்நிலையில், சத்துணவு, குழந்தைகள் மைய பணியாளர்கள் 21.11.2009 அன்று நடத்திய நன்றி அறிவிப்பு பாராட்டு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பின்வருமாறு அறிவிப்பு செய்தார்கள்:-

> "சமூக நலத் துறையில் முன்னாள் மத்திய சமையற்கூட சமையலர்களாக இருந்து, தற்போது தினக்கூலி அடிப்படையில் ஏறத்தாழ 30 ஆண்டுகளாகப் பணிபுரிந்துவரும் 33 பேருக்கு, அவர்களின் தகுதிக்கேற்ப சமூகநலத் துறையில் அலுவலக உதவியாளர் / இரவுக்காவலர் போன்ற பணியிடங்களில் நியமனம் வழங்கப்படும்."

8. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, முன்னாள் மத்திய சமையற்கூட சமையலர்கள் ஏற்கனவே ரூ.250–5–330–10–400 – என்ற ஊதியத்தில் நியமனம் செய்யப்பட்டு காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் கடலூர் ஆகிய 6 மாவட்டங்களில் தற்போது தினக்கூலி அடிப்படையில் ஊதியம் பெற்று வரும் 33 சமையலர்களையும், கடந்த சுமார் 30 வருட காலத்திற்கு மேலாக தினக்கூலி அடிப்படையில் அவர்கள் பணியாற்றி வருவதை கருத்தில் கொண்டு, சிறப்பு நிகழ்வாக, சமூக நலத்துறையில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் மற்றும் இரவுக் காவலர் ஆகிய பணியிடங்களில் ரூ4800–10000+1300 தர ஊதியம் என்ற ஊதிய ஏற்ற (திருத்தியமைக்கப்பட்ட) முறையில் தகுதிக்கேற்ப பணியமர்த்தவும், பின்னர் இத்தனியர்கள் சார்பில் தமிழ்நாடு அடிப்படை பணிக்கான சிறப்பு விதிகளில் தளர்த்தம் செய்யப்பட வேண்டிய விதிகளைக் குறிப்பிட்டு அரசுக்கு செயற்குறிப்பினை அனுப்புமாறும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா.இராம மோகனராவ்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

சமூக நல ஆணையர், சென்னை–5.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
முதன்மைச் செயலாளர் / ஆணையர்,
ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், சென்னை–113.
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, சென்னை–9.
ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத்துறை, சென்னை–15.

நகல்

மாநில கணக்காயர், சென்னை–18.
தலைமை அரசுத்துறை நிறுவன தணிக்கையர், சென்னை–2.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்புக்கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
6/01/10